*2022 மே 7]*

## (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், வெள்ளிமலை சுப்பிரமணியசுவாமி கோயில், பக்தருடைய அலுவலகக் கட்டடம் அறநிலையத் துறையினரால் எடுத்துக்கொள்ளப்பட்டது மற்றும் வெள்ளியங்கிரி மலைமீது ஏறி, இறைவனை தரிசிக்க வனத் துறையினர் அனுமதி மறுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அல்லது திருமதி வானதி சீனிவாசன் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, யாராவது ஒருவர்தான்* represent *செய்ய முடியும். (குறுக்கீடு) இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றியதை எடுத்துக்கொள்கிறேன். பிறகு, திருமதி வானதி சீனிவாசன் சொல்வதை திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

***திரு. எம்.ஆர். காந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் கன்னியாகுமரி மாவட்டம், வெள்ளிமலை சுப்பிரமணியசுவாமி கோயிலுக்குள் அந்த ஆலயத்தின் வளர்ச்சிக்காக, ஏறத்தாழ 100 ஆண்டு காலம் பணி செய்துகொண்டிருக்கக்கூடிய ஆலய பக்த சங்க அலுவலகக் கட்டடத்தை திடீரென்று அறநிலையத் துறையினர் பூட்டி, துறைவசம் எடுத்துக்கொண்டுவிட்டனர். அதை எதிர்த்து, அந்த அலுவலகத்தை உடனடியாகத் திறக்க வேண்டும் என்று சொல்லி, அந்த ஆலய முன்னேற்றச் சங்கமும், பொதுமக்களும், பக்தர்களும் அறவழிப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த அறவழிப் போராட்டத்தை நடத்துகின்றபொழுது, காவல் துறை தலையிட்டு, அங்கே இருந்த பெண் பக்தர்களையும், பிற பக்தர்களையும் ** எனவே, அதைப் பற்றித் தாங்கள் விவாதிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பக்தர்களை அப்படி நடத்தவில்லை. (குறுக்கீடு) அந்தச் சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அதற்குப் பதில் சொல்வார்கள்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2022 மே 7

**திரு. எம்.ஆர். காந்தி:** அதை நான் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களுக்கும் பதில் சொல்லிவிடுங்கள். இரண்டு கேள்விகளையும் உள்வாங்கிக் கொண்டு, இரண்டு கேள்விகளுக்கும் ஒரே நேரத்தில் பதில் சொல்லிவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள். (குறுக்கீடு) அவர்களும் கேள்வி கேட்கட்டும். இரண்டு கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிடுங்கள்.

**திருமதி வானதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் தென்கைலாயம் என்று அழைக்கப்படுகின்ற வெள்ளியங்கிரி மலை இருக்கிறது. வழக்கமாக பக்தர்களுக்கு வருடத்திற்கு மூன்று மாதங்களுக்குத்தான் அனுமதி கொடுப்பார்கள். ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் அந்த மலைமீது ஏறி, இறைவனை தரிசிப்பதற்காக அனைத்து ஏற்பாடுகளும் நடக்கும். இந்த வருடம் மே மாதத்தில் வனத் துறையினர் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அதனால் கோவிலுக்குச் செல்கின்ற பக்தர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம். இந்த வருடம் மட்டுமல்ல, கடந்த 3 வருடங்களாக கொரோனா தொற்று காரணமாக அங்கு செல்லவில்லை.

**திருமதி வானதி சீனிவாசன்:** கடந்த இரண்டு மாதங்களாக அங்கு போய்க்கொண்டிருக்கிறார்களே! மே மாதம்தான் திடீரென்று control செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாரதிய ஜனதா கட்சி

*2022 மே 7]* [திரு. பி.கே. சேகர்பாபு]

*உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் திருக்கோயிலை வருடத்திற்கு 3 மாதங்கள் அல்ல; பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய 4 மாதங்களுக்குத் திறந்து வைத்திருப்பார்கள். நீங்கள் இப்படி ஒரு கேள்வியை எழுப்புவீர்கள் என்பதற்காகவோ, என்னவோ தெரியவில்லை. இந்தப் பிரச்சினை வந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்துப்பேசினார். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும் அழைத்துப்பேசி, நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே நேற்றைக்கே அந்த மலைப் பாதையைத் திறந்து பக்தர்கள் தரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள் கேட்டார்கள். அவர் கேட்ட அந்தத் திருக்கோயிலில் இரண்டு அதிகாரங்கள் செலுத்தப்படுகின்றன. ஒன்று, இது இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற திருக்கோயில். ஆனால், பக்தர்கள் சங்கம் என்று ஒன்றை வைத்துக்கொண்டு, அவர்களாகவே நன்கொடை வசூலிக்கிறார்கள். அவர்களே திருவிழாக்களுக்கும் நன்கொடை வசூலித்துக் கொண்டிருக்கின்றார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு உருவான அரசமைப்புச் சட்டத்தின்படி சட்டப் பிரிவு என்ன கூறுகிறதோ, அதற்குத்தான் அடங்கி அனைவரும் நடக்க வேண்டுமே தவிர, அதிகாரம் படைத்தவர்கள் என்பதற்காக எல்லா அதிகாரங்களையும் அவரவர்கள் கையில் எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்க இந்த ஆட்சி தயாராக இல்லை. கிட்டத்தட்ட 2021 ஆம் ஆண்டு 4-வது மாதம் இது தவறான அணுகுமுறை என்று 79 (பி)-இன்படி அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. அதாவது, கடந்த ஆண்டு 12–4–2021 அன்றும் அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. இந்த நோட்டீஸ்களுக்கெல்லாம் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை. திருக்கோயிலுக்குள் இருக்கின்ற ஒரு மண்டபத்தை அவர்களாக எடுத்துக் கொண்டு அதில் ஒரு தனி நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த 5 ஆம் தேதியன்று சட்டப்படி, காவல் துறைக்கும், வருவாய்த் துறைக்கும் முறையான தகவலைச்சொல்லி, அந்த இடத்தை இந்து சமய அறநிலையத் துறை கையில் எடுக்கின்றது. நியாயமாக இருந்தால் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கலாம் அல்லது மேல்முறையீடு*

[திரு. பி.கே. சேகர்பாபு] [2022 மே 7

செய்திருக்கலாம். அந்த இடத்தை எடுக்க வந்த அதிகாரிகளை ஓர் அறையிலே வைத்துப் பூட்டுகிறீர்கள். பூட்டிவிட்டு அவர்களை வெளியிலே அனுப்பவில்லை. அதன் பிறகு அந்த மாவட்டத்தினுடைய கண்காணிப்பாளர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தகவல் தெரிவித்து, ஒரு பெண் ஆய்வாளர் அந்தத் திருக்கோயிலினுடைய காரியதரிசி என்று சொல்லப்படுகின்றவர், இவர்களையெல்லாம் காவல் துறைதான் வந்து விடுவிக்கின்றது. ஆகவே, சட்டப்படி நடந்திருக்கின்ற இந்தச் சம்பவத்திற்கு நீங்களும் நல்ல சம்பவமென்று வரவேற்க வேண்டும். அதேபோன்று, தற்போது 14 ஏக்கர் நிலம்கொண்ட ஒரு பரப்பளவு, இதேபோன்று ஓர் ஆக்கிரமிப்பு, நல்ல ஒரு மகான் பெயரை வைத்திருக்கின்ற அன்பிற்கினிய அண்ணன் காந்தி அவர்கள் அந்த இடத்தையும் மீட்டுத் தருகின்ற பணியிலே இறங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சட்டப்படிதான் இந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டிருக்கின்றது. திருக்கோயில்வசம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றது. ஆகவே, இதை வரவேற்று நன்றி கூறுங்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அருமை அண்ணன் காந்தி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் உட்காருங்கள்.*

*(பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எம்.ஆர். காந்தி, திருமதி வானதி சீனிவாசன் மற்றும் டாக்டர் சி. சரஸ்வதி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*